APP (17)

**நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், செங்கல்பட்டு மண்டலம்**
**அவர்களின் நடவடிக்கைகள்**
**முன்னிலை : திருமதி.பு.கவிதா,B.E.,M.Plan.,**

**ந.க.எண். 6959/2019செம3** நாள்: .02.2020

பொருள் : குடியிருப்பு கட்டிடம் - நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அலுவலகம், செங்கல்பட்டு மண்டலம், செங்கல்பட்டு – செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூர் வட்டம், காட்டூர் ஊராட்சி மற்றும் கிராமம், சர்வே எண்:185/10A-ல் பிளாட் எண். 38-ல் 195.00 ச.மீ பரப்பு மனையிடத்தில் 351.69 ச.மீ கட்டிடப் பரப்புடன் அமையும் உத்தேச குடியிருப்பு கட்டிட வரைப்படங்களுக்கு தொழில் நுட்ப ஒப்புதல் வழங்குதல் - குறித்து.

பார்வை :
1. மனுதாரர் திரு. M. கணேஷ் மற்றும் திரு. R. மணிகண்டன், அவர்களின் கடிதம் நாள் 30.12.2019
2. அரசாணை எண். 138, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை நாள் : 04.06.2004
3. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 7486/09/பிஏ2, நாள் : 16.04.2009
4. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 21075/09/பிஏ1, நாள் : 04.04.2012
5. அரசாணை (நிலை) எண். 86, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் நாள்: 28.03.12
6. நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.12201/2017/சிபி, நாள்.28.09.2017.
7. நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.14227/2017/சிபி, நாள்.14.12.2017.
8. நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 16091/2016/MP1 நாள் : 11.05.17
9. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.25208/2006/LA2 நாள்.14.06.2007
10. அரசாணை (நிலை) எண். 79 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள் : 04.05.17.
11. அரசாணை (நிலை) எண். 18 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் : 04.02.19.
12. அரசாணை (நிலை) எண். 18 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள் : 04.02.19.
13. இவ்வலுவலக கடிதம் இதே எண், நாள்: 23.01.2020 (நன்னிலை வரி, I & A கட்டணம், CCC கட்டணம், துணைக்கோள் நகர வளர்ச்சிக் கட்டணம், Security Deposit மற்றும் Display Board Fees கட்டணங்கள் செலுத்தக் கோரப்பட்டது)
14. மனுதாரர் திரு. M. கணேஷ் மற்றும் திரு. R. மணிகண்டன், அவர்கள் கடிதம் நாள். 30.01.2020 நன்னிலை வரி, I & A கட்டணம், CCC கட்டணம், துணைக்கோள் நகர வளர்ச்சிக் கட்டணம், Security Deposit மற்றும் Display Board Fees கட்டணங்கள் செலுத்தப்பட்டது.
15. நகர் ஊரமைப்பு ஆணையர் சுற்றறிக்கை கடிதம் எண். 9860/10 முதி1 நாள்:20.9.16-ன்படி Online Application No. 2019002020222846 நாள்: 07.12.19.

---

**உத்தரவு :**

செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூர் வட்டம், காட்டூர் ஊராட்சி மற்றும் கிராமம், சர்வே எண்:185/10A-ல் பிளாட் எண். 38-ல் 195.00 ச.மீ பரப்பு மனையிடத்தில் 351.69 ச.மீ கட்டிடப் பரப்புடன் அமையும் மனையிடத்திற்கு **A முதல் D** வரை எல்லையிட்டு மனையிட ஒப்புதலும் அம்மனையில் அமையும் உத்தேச குடியிருப்பு கட்டிட வரைப்படங்களுக்கு க.வ./ந.ஊ.து.இ(செம)எண். **07/2020** என எண்ணிடப்பட்டு பின்வரும் நிபந்தனைகளுடன் தொழில் நுட்ப அனுமதி அளிக்கப்படுகிறது.

For PKR Estates LLP

Designated Partner

**Area Statement:-**

| Area Details | Area in Sq.m |
|---|---|
| **Plot Area** | **195.00** |
| Ground Floor Area | 117.23 |
| First Floor Area | 117.23 |
| Second Floor Area | 117.23 |
| **Total** | **351.69 Sq.m** |

FSI - 1.803

பார்வை 2 முதல் 12 வரை காணும் அரசாணைகள் மற்றும் சுற்றறிக்கையின்படி கூராய்வு கட்டணம், நன்னிலை வரி, I & A கட்டணம், CCC கட்டணம், Security Fees துணைக்கோள் நகர வளர்ச்சிக் கட்டணம் மற்றும் Display Board Fees ஆகிய கட்டணங்கள் செலுத்துமாறு பார்வை (13)-ல் காணும் இவ்வலுவலக கடிதத்தின் மூலம் கோரப்பட்டு, பார்வை(14)-ல் கண்ட மனுதாரரின் கடிதத்துடன் அரசுக்கு செலுத்தப்பட வேண்டிய நன்னிலை வரி **ரூ.3,000/-**, துணைக்கோள் நகர வளர்ச்சிக் கட்டணம் **ரூ.6,000/-**, I & A கட்டணம் **ரூ.1,33,500**, CCC கட்டணம் **ரூ.3,800/-** Security Deposit **ரூ.66,750/-** (ம) Display Board Deposit **ரூ.10,000/-** செலுத்தி விபரம் பெறப்பட்டுள்ளது.

**சிறப்பு நிபந்தனைகள் :**

1. It is responsibility of the builders to ensure safe bearing capacity of the soil and adequacy of the foundations.

2. Planning permission is issued in accordance with the provisions of the Town and Country Planning Act and the rules made there under and does not cover the structural stability aspects including the safety during the construction which are covered under the Building Rules under the Local Bodies Act. Planning Permission is issued subject to the condition that the applicant/developer and also the architects/Licensed Surveyors and the Structural Engineer associated with the development shall ensure that developments shall be structurally sound and adequate safety measures are taken during the process of construction.

3. நகர் ஊரமைப்புத் துறை சட்டப்பூர்வமாக தொழில்நுட்ப அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. தொழில்நுட்ப அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப்பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானப்பத்திரம், பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதார்ர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன் மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.

சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ணப்பதாரருக்கு சொத்தின்மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும், அதன் மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக் கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத் துறை பொருத்தமான அமைப்பு அல்ல.

For PKR Estates LLP

Designated Partner

19

4. கட்டுமானங்களுள் நடைபெறும் இடத்தில், பொதுமக்கள் அனைவருக்கும் தெரியும் வகையில் பலகையில், வளர்ச்சி கட்டுப்பாட்டு விதிகளின் படி தளப்பரப்பு விகிதம் (FSI), திறவிடங்கள் (Set Back) வாகன நிறுத்தம் மற்றும் பல நிறுவப்பட்டு இருக்க வேண்டும்.

5. மத்திய மற்றும் மாநில அரசு துறையினரிடமிருந்து பெறப்பட்ட தடையின்மை சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் அனைத்தும் கண்டிப்பாக நிவர்த்தி செய்யப்பட வேண்டும்.

6. The Provisions in the G.O. (Ms) No. 17, H & UD (UD4)(3), Department, dated : 05.02.2016 relating to installation and use of solar energy system should be followed.

7. பார்வை 6-ல் சுட்டிய நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களின் சுற்றறிக்கையின்படி "The Tamil Nadu Government in G.O.Ms.No.112, Housing and Urban Development Department dated: 22.06.2017 have approved the Tamil Nadu Real Estate (Regulation & Development) Act 2016, The promoter has to advertise, market, book, sell or offer for sale or invite persons to purchase in any manner any plot, apartment or building, as in the case may be, in any Real Estate Project or part of it only after registering the Real Estate Regulatory Authority"

<u>நிபந்தனைகள்</u> :-

1. மேற்கண்ட உத்தேச குடியிருப்பு கட்டுமானத்திற்கு Solar Water Heating System அமைக்கப்பட வேண்டும்.

2. வரைபடத்தில் உத்தேசிக்கப்பட்டவாறு வாகனம் நிறுத்துமிடம் அந்த பயனுக்காகவே பயன்படுத்தப்பட வேண்டும்.

3. மனையில் காட்டப்பட்டுள்ள திறவிடங்கள் அதன்படியே நிலை நிறுத்தப்பட வேண்டும்.

4. தற்போது ஒப்புதல் பெறப்பட்ட வரைபடத்திற்கு மாறாக கட்டிடத்தில் எவ்வித மாற்றமும் செய்தல் கூடாது. மாற்றங்கள் ஏதேனும் செய்வதாக இருந்தால் இவ்வலுவலகத்தின் முன்அனுமதி பெறப்பட வேண்டும்.

5. மழைநீர் சேகரிப்பு வசதிகள் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளவாறும், அரசாணை எண். 138, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் : 11.10.2002-ன்படி கட்டிடத்தில் செயல்படுத்தப்பட வேண்டும்.

6. உத்தேச கட்டிடத்தில் இருந்து வெளியேறும் கழிவுநீர் தனியார் வாகனங்கள் மூலம் வெளியேற்றவும், உபயோகிப்பாளருக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி மற்றும் இதர தேவைக்கான தண்ணீர் வசதி ஆகியவற்றை மனுதாரர் தனது சொந்த செலவில் செய்து தரவேண்டும்.

7. மனையில் அமையும் குடிநீர் மேல்நிலைத் தொட்டி மற்றும் கிணறு ஆகியவற்றிற்கு கொசு தடுப்பு சாதனம் பொருத்தப்பட வேண்டும்.

8. உத்தேச கட்டுமானத்தில் விதிப்படித் தேவையான அளவுக்கு தீத்தடுப்பு மற்றும் தீயணைப்பு சாதனங்கள் அமைக்கப்பட வேண்டும்.

For PKR Estates LLP

Designated Partner

9. அரசாணை எண். 341 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.1) துறை, நாள் : 03.11.2004-ன்படி செப்டிக் டேங்க்கில் ‘‘U’’Trap அமைத்தல் வேண்டும்.

10. சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அறிவிக்கையின்படி உத்தேச கட்டிடத்திற்கு Fly Ash Bricks and Materials பயன்படுத்தப்பட வேண்டும்.

11. அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின் நகல் (உண்மை நகல்) கட்டுமானங்கள் நடைபெறும்போது அவ்விடத்தில் அனைவருக்கும் தெரியும் வகையில் பலகையில் நிறுவப்பட்டிருக்க வேண்டும்.

12. உத்தேசம் குறித்து கழிவு நீர் வெளியேற்றுதல் தொடர்பாக தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாடு வாரிய சட்டம் 1974 பிரிவு 25 (Water act)-ன் மேற்படி வாரிய இணக்கம் (Consent) பெறப்பட வேண்டும்.

13. கட்டிடம் கட்டப்படும் போது அரசு அங்கீகாரம் பெற்ற மின் ஒப்பந்ததாரர் மூலம் ஒயரிங் செய்யப்பட வேண்டும்.

ஒப்புதல் அளிக்கப்பட்ட செயலாணைக் கடிதம் மற்றும் வரைபடங்கள் இரண்டு தொகுப்பு இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ), **திருப்போரூர் ஊராட்சி ஒன்றியம்,** அவர்கள் இறுதி உத்தரவினை விண்ணப்பதாரருக்கு வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

மேலும் ஒப்புதல் அளிக்கப்பட்ட செயலாணை கடிதம் மற்றும் வரைபடங்கள் பெற்றுக் கொண்டமைக்கு ஒப்புகைச் சான்றினை அனுப்பி வைக்குமாறு வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ), **திருப்போரூர் ஊராட்சி ஒன்றியம்,** அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

13/2/2020

நகர் ஊரமைப்பு மண்டல துணை இயக்குநர்,
செங்கல்பட்டு மண்டலம், செங்கல்பட்டு.

13.2.2020

**இணைப்பு** : ஒப்புதலளிக்கப்பட்ட வரைபடம் - 2 தொகுப்புகள்
( 1 x2 = 2 )

**பெறுநர்** : தனி அலுவலர்/வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ),
திருப்போரூர் ஊராட்சி ஒன்றியம்,
திருப்போரூர் வட்டம்,
காஞ்சிபுரம் மாவட்டம்.

**நகல்** : Thiru. M. Ganesh &
Thiru. R. Manikandan,
No.1/100, Pilliyar Koil Street,
Injambakkam,
Chennai - 600 115.

For PKR Estates LLP
Designated Partner

தனி அலுவலர், வெண்பேடு ஊராட்சி / வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ), திருப்போரூர்
அவர்களின் நடவடிக்கைகள்
முன்னிலை - திரு.எம்.வெங்கட்ராகவன்.

ந.க.எண்.665/2020/ஆ1. நாள்.10.03.2020

பொருள் - கட்டிட வரைபட அனுமதி - திருப்போரூர் ஊராட்சி ஒன்றியம் - வெண்பேடு ஊராட்சி காட்டூர் கிராமம், Mr.M.Ganesh & Mr.R.Manikandan என்பவரின் சர்வே எண்.185/10A-ல் பிளாட் எண்.38-ல், 195.00ச.மீ பரப்பு மனையிடத்தில் 351.69 ச.மீ கட்டிட பரப்புடன் அமையும் உத்தேச குடியிருப்பு கட்டிட வரைபடங்களுக்கு கட்டிட வரைபட அனுமதி வழங்கி உத்திரவிடுதல்.

பார்வை - 1.அரசுஆணைஎண்.255 நாள்.19.08.97.
2.நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், செங்கல்பட்டு மண்டலம் அவர்களின் ந.க.எண்.6959/2019/செம3 நாள்.13.02.2020.
3.க.வ./ந.ஊ.து.இ(செம) எண்.07/2020.
4.மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர்(மண்டலம் - III) அவர்களின் கடிதம்.
5.வெண்பேடு ஊராட்சி மன்றத்தீர்மான எண். நாள். .03.2020.
பலவகை ரசீது எண்.17864 நாள்.06.03.2020.

********

உத்தரவு -

திருப்போரூர் ஊராட்சி ஒன்றியம், வெண்பேடு ஊராட்சி காட்டூர் கிராமம், Mr.M.Ganesh & Mr.R.Manikandan என்பவரின் சர்வே எண்.185/10A-ல் பிளாட் எண்.38-ல், 195.00ச.மீ பரப்பு மனையிடத்தில் 351.69 ச.மீ கட்டிட பரப்புடன் அமையும் உத்தேச குடியிருப்பு கட்டிட வரைபடங்களுக்கு கீழ்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு கட்டிட வரைபட அனுமதி வழங்கி உத்தரவிடப்படுகிறது.

மேற்படி அமையும் மனையிடத்திற்கு A முதல் D வரை எல்லையிட்டு மனையிட ஒப்புதலும், அம்மனையில் அமையும் உத்தேச குடியிருப்பு கட்டிட வரைபடங்களுக்கு பார்வை 3-ல் காணும் எண்ணிடப்பட்டு, நிபந்தனைகளுக்குட்பட்டு தொழில்நுட்ப அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

**Area Statement:**

| Area Details | Area in Sq.m | Area in Sq.Ft |
|---|---|---|
| Plot Area | 195.00 | 2100.00 |
| Grount Floor | 117.23 | 1261.00 |
| First Floor | 117.23 | 1261.00 |
| Second Floor | 117.23 | 1261.00 |
| **Total** | **351.69** | **3783** |

FSI - 1.803

இந்த அனுமதியானது 10.03.2020 முதல் 09.03.2021 தேதி வரை ஒரு ஆண்டுக்கு செல்லுபடியாகும். அனுமதி கட்டணம் ரூ.27,731/- வங்கிவரைவாக வெண்பேடு ஊராட்சியில் செலுத்தப்பட்டு, அதன் ரசீது மற்றும் அங்கீகரிக்கப்பட்ட வரைபடங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

கட்டிட தொழிலாளர் நலநிதி, ரூ.38,000/- யூனியன் பாங்க் ஆஃப் இந்தியா வங்கியில் சம்மந்தப்பட்ட கணக்கு எண்.530601010038239-ல் செலுத்தப்பட்டுள்ளது.

For PKR Estates LLP
Designated Partner

## நிபந்தனைகள்

1. கட்டிடத்தின் முன் பக்கத்தில் 1.5 மீட்டருக்கு குறையாமலும் பின் பகுதியில் 1.5 மீட்டருக்கு குறையாமலும் இரு பக்கங்களிலும் 2 மீட்டருக்கு குறையாமலும் இடைவெளி விடப்பட்டிருக்க வேண்டும்.
2. தமிழ்நாடு ஊராட்சியின் 1994ம் ஆண்டு சட்டத்தின்படி சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழும விதிகளில் ஏற்படுத்தப்பட்டுள்ள எல்லாகட்டுப்பாடுகளுக்கும் உட்பட்டிருத்தல் வேண்டும்.
3. அரசாங்கத்திற்கு சொந்தமான இடங்களிலோ அல்லது இம்மனுதாருக்கு சம்மந்தமில்லாத வேறு இடங்களிலோ ஆக்கிரமணம் செய்வது கூடாது.
4. கட்டிட வேலைகள் நடக்கும் பொழுதோ அல்லது வேறு எந்த நேரங்களிலோ ஊராட்சியிலிருந்து ஆய்வு செய்ய வரும் அதிகாரிகளுக்கு அங்கீகரிக்கப்பட்ட வரைபடங்களை காண்பிக்க வசதியாக வேலை நடக்குமிடங்களில் மேற்படி வரைபடங்களை வைத்திருத்தல் வேண்டும்.
5. இந்த உத்தரவால் அனுமதிக்கப்பட்ட காலவரையரைக்குள் கட்டிடம் கட்டி முடிக்கப்படாவிடில் அனுமதியை மீண்டும் புதியதாக மனு கொடுத்து அனுமதி பெற வேண்டும்.
6. அனுமதிக்கு வரைபடத்தில் கூடுதலோ அல்லது மாறுதல் ஏதேனும் செய்துகட்ட வேண்டுமானால் அதற்குரிய திருத்தப்பட்ட வரைபடங்களுடன் தலைவர் நிர்வாக அதிகாரிக்கு விண்ணப்பம் செய்து உத்தரவு பெற்ற பிறகுதான் மாறுதல் கட்டிடம் கட்டவேண்டும்.
7. கட்டிடம் கட்ட உத்தரவு பொய்ப்பதிவுகள் மூலம் பெற்றதாகவோ அல்லது ஏதேனும் கட்டிட விதிகளுக்கு புறம்பாகவோ பெற்றதாயிருந்தால் மேற்படி உத்தரவினை ரத்து செய்ய தனி அலுவலருக்கு உரிமை உண்டு.
8. புதியதாக கட்டப்படும் கட்டிட இடங்கள் எந்த நேரத்திலும் சுத்தமான பொது சுகாதாரக்கேடு விளைவிக்காத வகையில் வைத்து இருத்தல் வேண்டும்.
9. மனுதாரர் கட்டிடத்தை கட்டி முடித்த பின்பு இவ்வலுவலகத்திலிருந்து சான்றிதழ் பெற்ற பின்பே குடிபுக வேண்டும்.
10. கட்டிடத்திலிருந்து வரும் கழிவுநீரை மனுதாரர் தன் சொந்த இடத்திற்குள்ளேயே நிறுத்தி வைத்து அவைகளை அப்புறப்படுத்தும் வகையில் வடிகால்வாய்களும் கழிவு நீர்த்தொட்டிகளும் அமைத்துக்கொள்ள வேண்டும்.
11. கட்டிடம் தொழிலகங்களுக்காகவோ அல்லது வேறு தொழிலாளர்கள் வேலை செய்ய வேண்டிய இடங்களுக்காகவோ கட்டப்படாமலிருந்தால் அவைகளுக்கு மாவட்ட சுகாதார அலுவலரிடமிருந்தும், தொழிலகங்களின் ஆய்வாளரிடமிருந்தும் மற்றும் உறுப்பினர் செயலாளர், சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமம் ஆகியோரிடமிருந்தும் அனுமதி பெற்றிருத்தல் வேண்டும்.
12. அங்கீகரிக்கப்பட்ட வரைபடங்களின்படியே கட்டிடம் கட்டி முடிக்கப்பட்ட பின்பு இவ்வூராட்சியிலிருந்து சான்றிதழ் பெற்றுக்கொள்ள வேண்டும்.
13. கட்டிட வேலை முடிந்த பின்போ அல்லது குடியேறிய பின்னரோ 15 தினங்களுக்குள் தனி அலுவலர் அவர்களுக்கு எழுத்து மூலமாக தெரிவிக்க வேண்டும்.

For PKR Estates LLP
Designated Partner

தனி அலுவலர், வெண்பேடு ஊராட்சி /
வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ)
திருப்போரூர்.
10.3.2020

பெறுநர்

Mr.M.Ganesh & Mr.R.Manikandan,
No.1/100, Pillaiyar Koil Street,
Injambakkam, Chennai – 600115.

நகல் - ஊராட்சி செயலர், வெண்பேடு ஊராட்சி. திருப்போரூர் ஊராட்சி ஒன்றியம்